# அருப்புக்கோட்டை நகராட்சி
## நகர்மன்ற சாதாரணக்கூட்டப்பொருள்

நிகழும் திருவள்ளுவராண்டு 2053 சுபகிருது வருடம் ஆடி மாதம் 13ம் நாள் 2022ம் ஆண்டு ஜீலை மாதம் 29ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணியளவில் அருப்புக்கோட்டை நகர்மன்ற கூட்ட மண்டபத்தில் அவசரக்கூட்டம் நடைபெறும். அதுசமயம் கீழ்க்கண்ட பொருட்கள் மன்ற பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

(ஒம்) திரு.சி.சுந்தரலட்சுமி
நகர்மன்றத் தலைவர்,
அருப்புக்கோட்டைநகராட்சி.

இடம் : அருப்புக்கோட்டை
நாள் : 27.07.2022

**நகர்மன்றத் தலைவர் அவர்களால் கொண்டுவரப்பெறும் தீர்மான வடிவு**

**பொருள் 1:** அருப்புக்கோட்டை நகராட்சி வார்டு எண் 33 நகர்மன்ற உறுப்பினர் திருமதி.வே.கலைச்செல்வி அவர்கள் 11.07.2022 அன்று இயற்கை எய்தினார் அன்னாருக்கு இந்நகர்மன்றம் சார்பாக இரஙகல் தீர்மானம் நிறைவேற்ற மன்றத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1076/2020/சி3

**தீர்மான எண்:146**

நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டு வரப்பெற்ற இரஙகல் தீர்மானத்தை நகர்மன்றத்துணைத்தலைவர் வழிமொழிய ஏனைய நகர்மன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது

**********

**பொருள் 2:** ஆணையாளர் அவர்களது ஜீலை 2022 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

பார்வையிட்டு பதிவு செய்யலாம்

**தீர்மான எண்:147**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 3:** நகராட்சி பொறியாளர்(பொ) அவர்களது ஜீலை 2022 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

பார்வையிட்டு பதிவு செய்யலாம்

**தீர்மான எண்:148**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 4 :** பிறப்பு இறப்பு விவரம் கீழ்க்கண்ட விபரப்படிக்கு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**பதிவு செய்யப்பட்டவை**

| | ஜீலை |
|---|---|
| பிறப்பு | 73 |
| இறப்பு | 38 |
| இறந்து பிறந்தவை | 0 |

**அலுவலகக் குறிப்பு :**

பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்:149**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 5:** அருப்புக்கோட்டை நகராட்சி வார்டு A, பிளாக் –20, நகரளவு எண் 86/2ல், 1832ச.மீ. (0.45 ஏக்கர்) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற மனைப்பிரிவை குடியிருப்பு மனைப்பிரிவு அனுமதி கோரி திரு.N.A.மாரிமுத்து விண்ணப்பித்ததின் பேரில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், விருதுநகர் அவர்களால் ந.க.எண்.228/2022/விருமா, நாள் 16.05.2022ல் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடத்திற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழஙகப்பட்டது. மேற்படி தொழில்நுட்ப ஒப்புதல் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளின் படி மேற்படி வரைபடத்தில் உள்ள சாலைகள், உள்ளாட்சி உபயோகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தின் ஆவண எண் 2885/2022, நாள் 07.04.2022ன் மூலம் நகராட்சிக்கு மனுதாரரால் தானமாக வழஙகப்பட்டுள்ளது. மேற்படி சாலையினை நகராட்சி ஏற்று நகராட்சி அசையாச் சொத்து பதிவேட்டில் பதிவு செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

__அலுவலக குறிப்பு__

மன்றம் அனுமதி வழஙகலாம் ந.க.எண்.2551/2022/எப்1

__தீர்மான எண்:150__

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்6:** அருப்புக்கோட்டை நகராட்சி வார்டு G, பிளாக் –15 நகரளவு எண் 35ல், 12796ச.மீ.(3.16ஏக்கர்) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற மனைப்பிரிவை குடியிருப்பு மனைப்பிரிவை அரசாணை எண் – 78, 172 H&UD நாள் 04.05.2017 மற்றும் 13.10.2017ன்படி வரன்முறைப்படுத்த கோரி திரு.K.கணேசன் என்பவர் விண்ணப்பித்ததன் பேரில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், விருதநகர் அவர்களால் ம.வ(மு)/ ந.ஊ.து.இ.(விருமா) எண் 16/2022, நாள் 26.04.2022ன் படி தொழில்நுட்ப ஒப்புதல் வழஙகப்பட்டதன் பேரில் மேற்படி வரைபடத்தில் உள்ள சாலை மற்றும் பூஙகாக்களை ஏற்று அசையாச் சொத்து பதிவேட்டில் பதிவு செய்யலாம். ஆவண எண் 6733, நாள் 21.06.2011

__அலுவலக குறிப்பு__

மன்றம் அனுமதி வழஙகலாம் ந.க.எண்.950/2022/எப்1

__தீர்மான எண்:151__

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்7:** விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் (KNMT) 2022–23ன் கீழ் ரூ.23.00 இலட்சம் மதிப்பீட்டில் அருப்புக்கோட்டை நகராட்சி வார்டு எண். F பிளாக் எண்.10 சர்வே எண்.1/1 நேதாஜி சாலையில் உள்ள பழைய எரிவாயு தகனமேடையை நவீன LPG தகன மேடையாக மாற்றும் பணி மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறை G.O.(Ms) No.88 நாள் 17.06.2022 ன் படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

அதன்பேரில் 15.07.2022 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/s.SGS Services, Chennai என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விலையைவிட 5.59 சதவீதம் அதிகமாக உள்ளதால் இப்பணிக்கான விலைகுறைப்பு சம்மத கடிதம் (Negotiation) வழஙகுமாறு கேட்டுக்கொண்டதற்கு இணஙக 22.07.2022 அன்று ஒப்பந்ததாரரால் வழஙகப்பட்ட விலைக்குறைப்பு கடிதத்தின் படி ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தகாரா் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | Vishnu Fabrication & Designing Chennai-98 | 6.20 % மதிப்பீட்டு விலையைவிட அதிகமாக |
| 2. | M/s.SGS Services, Chennai-99 | மதிப்பீட்டு விலைக்கே |

__அலுவலக குறிப்பு:__

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலைக்கே கொடுத்துள்ள M/s.SGS Services, Chennai-99 அவர்களின் ஒப்பந்த புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.
2. மேலும் மேற்கண்ட பணியின் அவசர அவசியத்தை கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழஙகியதையும் மன்றம் அஙகீகரிக்கலாம்.

ந.க.எண். 1827/2022/இ1

__தீர்மான எண்:152__

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்8:** விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் (KNMT) 2022–23ன் கீழ் ரூ.187.94 இலட்சம் மதிப்பீட்டில் அருப்புக்கோட்டை நகராட்சி நெசவாளர் காலனி 1வது தெருவில் புதியதாக நூலகம் மற்றும் அறிவு சார் மையம் கட்டும் பணி மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறை G.O.(Ms) No.88 நாள் 17.06.2022 ன் படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

அதன்பேரில் 15.07.2022 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திருமதி.L.காளியம்மாள், கடலாடி என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விலையைவிட 7.01 சதவீதம் அதிகமாக உள்ளதால் இப்பணிக்கான விலைகுறைப்பு சம்மத கடிதம் (Negotiation) வழஙகுமாறு கேட்டுக்கொண்டதற்கு இணஙக 22.07.2022 அன்று ஒப்பந்ததாரரால் வழஙகப்பட்ட விலைக்குறைப்பு கடிதத்தின் படி ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தகாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | ஹரிராம் கன்ஸ்ட்ரக்சன், ஈரோடு | 9.06 % மதிப்பீட்டு விலையைவிட அதிகமாக |
| 2. | திருமதி.L.காளியம்மாள், கடலாடி | மதிப்பீட்டுவிலைக்கே |

**அலுவலக குறிப்பு:**

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலைக்கே கொடுத்துள்ள திருமதி.L.காளியம்மாள், கடலாடி அவர்களின் ஒப்பந்த புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.
2. மேலும் மேற்கண்ட பணியின் அவசர அவசியத்தை கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழஙகியதையும் மன்றம் அஙகீகரிக்கலாம்.

ந.க.எண். 1827/2022/இ1

**தீர்மான எண்:153**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்9:** இந்நகராட்சியில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்பணிகள் பார்த்து பிடித்தம் செய்யப்பட்ட வைப்புத்தொகைகளை திரும்ப வழஙகக்கோரி ஒப்பந்ததாரரால் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

| Sl. No. | Year | Name of Work | Amount | Contractor |
|---|---|---|---|---|
| 1 | 2017-18 | Const of Urban Health Centre at Compost Yard (file No.9942/21/b2) | 60000 | A.P.Mohankumar |

மேற்படி வைப்புத்தொகை பிடித்தம் செய்யப்பட்டு 3 ஆண்டுகள் முடிவுற்றுள்ள நிலையில் Lapsed Deposit ஆக இருந்துவரும் நிலையில் மேற்படி தொகைக்கு தணிக்கை தடை ஏதும் நிலுவை இல்லாததாலும் மேற்கண்ட தொகை ஒப்பந்ததாரருக்கு திரும்ப வழஙக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி வழஙகலாம் ந.க.எண்.9942/2021/பி2

**தீர்மான எண்:154**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்10:** அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 36 வரை உள்ள பகுதிகளில் குடிநீர் பம்பிங மற்றும் குடிநீர் விநியோகக்குழாய்கள் திருப்புவனத்திலிருந்து கட்டஙகுடி வரை உள்ள குடிநீர் பம்பிங குழாய்கள் மற்றும் கட்டஙகுடியிலிருந்து மதுரை ரோடு மேல்நிலை நீர்தேக்க தொட்டி வரை உள்ள குடிநீர் பம்பிங குழாய்கள் போன்றவற்றில் ஏற்படும் பழுதுகளை உடனடியாக சரிசெய்து பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் தஙகு தடையின்றி செய்வது அவசிய தேவையாக உள்ளது. மேற்படி உள்ள குடிநீர் பம்பிங குழாய் மற்றும் குடிநீர் விநியோகக் குழாய்களில் ஏற்படும் பழுதுகளை ஆண்டுப்பராமரிப்பு மூலம் பணி மேற்கொள்வதற்கு ஆகும் உத்தேச செலவுத்தொகை ரூ.9.20 இலட்சத்தினை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.3710/2022/இ1

**தீர்மான எண்:155**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்11:** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட சர்வே வார்டு – F பிளாக் 11, நகரளவு எண் 186, 190ல் 1 ஏக்கர் 31 சென்ட் பரப்பளவு உள்ள இடத்தில் வணிகப்பகுதியாக உள்ளதை கல்விநிலைய பயன்பாட்டு பகுதியாக மாற்றம் செய்துதருமாறு திரு.T.R.S.கார்த்திகேயன் என்பவர் விண்ணப்பம் செய்துள்ளார். மேற்படி வணிகப்பகுதியாக உள்ளதை கல்விநிலைய பயன்பாட்டு பகுதியாக மாற்றம் செய்ய நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், விருதுநகர் வழியாக அரசு செயலாளர், நகர்ஊரமைப்பு துறை, சென்னை அவர்களுக்கு பிரேரனை அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.4267/2022/எப்1

**<u>தீர்மான எண்:156</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்12:** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட சர்வே வார்டு – F பிளாக் 11, நகரளவு எண் 187, 191ல் 1 ஏக்கர் 57 சென்ட் பரப்பளவு உள்ள வணிகப்பகுதியாக உள்ளதை கல்விநிலை பயன்பாட்டு பகுதியாக மாற்றம் செய்துதருமாறு திரு.N.T.வாணி என்பவர் விண்ணப்பம் செய்துள்ளார். மேற்படி வணிகப்பகுதியாக உள்ளதை கல்விநிலைய பயன்பாட்டு பகுதியாக மாற்றம் செய்ய நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், விருதுநகர் வழியாக அரசு செயலாளர், நகர்ஊரமைப்பு துறை, சென்னை அவர்களுக்கு பிரேரனை அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.4215/2022/எப்1

**<u>தீர்மான எண்:157</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்13:** தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 306 உட்பிரிவு 5 மற்றும் 6 கீழ் வழஙகப்பட்டுள்ள அதிகாரம் மற்றும் அறிவுரைகளின்படி கீழ்கண்ட கட்டுபாடுகள் அருப்புக்கோட்டை நகராட்சி பகுதிகளில் விதித்து மன்றத்தின் ஒப்புதலுக்கும் பார்வைக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண் | பகுதிகள் | அபராத தொகை ரூ /– |
|---|---|---|
| 1 | நகராட்சி ரோட்டில் அல்லது வாறுகாலில் குப்பை கொட்டுதல் தனிநபர் அபராதம் தொகை | 100 |
| 2 | நகராட்சி ரோட்டில் அல்லது வாறுகாலில் குப்பை கொட்டுதல் வணிக நிறுவனஙகளுக்கு அபராதம் தொகை | 500 |
| 3 | நகராட்சி ரோட்டில் அல்லது வாறுகாலில் குப்பை கொட்டுதல் தொழிற்சாலைகளுக்கு அபராதம் தொகை | 1000 |
| 4 | இறைச்சி கழிவுகளை நகராட்சி பொது இடஙகளில் அல்லது வாறுகாலில் கொட்டினால் அபராதம் தொகை | 1000 |
| 5 | கால்நடைகள் (மாடுகள், ஆடுகள் ரோட்டில் அழையவிடும் உரிமையாளருக்கு அபராதம் தொகை) | 5000 |
| 6 | நகராட்சி பகுதிகளில் ரோட்டில் கட்டிடகழிவுகளை கொட்டி வைக்கும் வீட்டின் உரிமையாளர்களுக்கு அபராதம் தொகை | 5000 |
| 7 | மருத்துவமனை மற்றும் இரத்த பரிசோதனை மையஙகள் மருத்துவ கழிவுகளை ரோட்டில் கொட்டினால் அபராதம் தொகை | 5000 |

மேற்கண்டவாறு அபராதம் விவரஙகளை தினசரி பத்திரிக்கை நாளிதழில் விளம்பரம் செய்த நாளிலிருந்து 30நாட்களுக்குள் பொது மக்களின் ஆட்சேபனை மற்றும் ஆலோசனைக்கு பெறுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம் ந.க.எண் 4184/2022/எச்1

**<u>தீர்மான எண்:158</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்14:** அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் முதிர்ந்த கொசுகளை ஒழிக்கும் வகையில் Vehicle Mounted Fogging Machine கொள்முதல் செய்ய உள்ளதால் பொது சுகாதார அவசர அவசியம் கருதி கொள்முதல் செய்வதற்குண்டான செலவு தொகைக்கு இந்நகர்மன்றத் தீர்மான எண்.142, நாள்.30.06.2022 ல் நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

அதன்பேரில் மேற்கண்ட பணிக்கு 05.07.2022 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் நகல்களின் இணைப்புடன் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தகாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | Almas Traders<br>9, East Car Street<br>Sivakasi | ரூ. 499400– |
| 2. | Fancy Agency<br>467, Main Bazaar<br>Virudhunagar | ரூ. 498500/– |

<u>அலுவலகக் குறிப்பு :–</u>

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், குறைந்த விலைப்புள்ளி அளித்த ரூ.498500/– க்கு குறைவாக கொடுத்துள்ள Fancy Agency, Virudhunagar ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ளலாம்.குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழஙகியதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார நலன் கருதி மன்றத்தின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழஙகியதை மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.3448/2022/எச்1

<u>தீர்மான எண்:159</u>

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்15: அருப்புக்கோட்டை நகராட்சி பொது சுகாதார பிரிவு வாகனமான டி.என்.67 எஎச் 8624 வாகனத்திற்கு பழுது பணிகள் பார்த்து தகுதிசான்று புதுப்பித்து தருவதற்கும் மேலும் அதற்கான செலவு தொகைக்கு இந்நகர்மன்றத் தீர்மான எண்.140, நாள்.30.06.2022 ல் நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

அதன்பேரில் மேற்கண்ட பணிக்கு 20.07.2022 அன்று விலைபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகள் நகல்களின் இணைப்புடன் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தகாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | Shri Balamurugan<br>Automobiles<br>Aruppukottai | ரூ.234750/– |
| 2. | Shri Manojkumar<br>Automobiles<br>Aruppukottai | ரூ.229500/– |

<u>அலுவலகக் குறிப்பு :–</u>

வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில், குறைந்த விலைப்புள்ளி அளித்த மதிப்பீட்டு விலையைவிட ரூ.229500/– குறைவாக கொடுத்துள்ள Shri Manojkumar Automobiles, Aruppukottai ஒப்பந்ததாரர் அவர்களின் விலைப்புள்ளியை ஒப்புக்கொள்ளலாம்.குறைந்த விலைபுள்ளி அளித்த நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழஙகியதை மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.3850/2022/எச்1

<u>தீர்மான எண்:160</u>

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்16: அருப்புக்கோட்டை நகராட்சி பொது சுகாதார பிரிவு தூய்மை பணியாளர்களுக்கு 2021–2022 ஆண்டுக்கு தேவையான பாதுகாப்பு உபகரணஙகள் கொள்முதல் செய்ய உள்ளதால் பொது சுகாதார அவசர அவசியம் கருதி கொள்முதல் செய்வதற்குண்டான செலவு தொகைக்கு இந்நகர்மன்றத் தீர்மான எண்.141, நாள்.30.06.2022 ல் நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

அதன்பேரில் மேற்கண்ட பணிக்கு 05.07.2022 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் நகல்களின் இணைப்புடன் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தகாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | Almas Traders<br>9, East Car Street<br>Sivakasi | ரூ.5180/– |
| 2. | Fancy Agency<br>467, Main Bazaar<br>Virudhunagar | ரூ. 5090/– |

**அலுவலகக் குறிப்பு :–**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், குறைந்த விலைப்புள்ளி அளித்த மதிப்பீட்டு விலையைவிட ரூ.5090/– குறைவாக கொடுத்துள்ள Fancy Agency,Virudhunagar ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ளலாம் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழஙகியதை மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.3446/2022/எச்1

**தீர்மான எண்:161**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்17:** அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 9, ஜோதிபுரம் 5வது தெருவில் தண்ணீர் இல்லாத காரணத்தினால் மின் மோட்டார் இயக்கம் இல்லாமல் உபயோகமற்ற நிலையில் பொது மக்கள் போக்குவரத்துக்கு இடையூறாக உள்ள மினிபவர் பம்பு மின் இணைப்பு எண் 201–019–567, 201–019–740யை நிரந்தர துண்டிப்பு செய்ய கோரப்பட்டது.

மேற்படி மின்இணைப்பை நிரந்தர துண்டிப்பு செய்ய துண்டிப்பு கட்டணமாக தொகை ரூ.736/–யை செலுத்த தமிழ்நாடு மின்சார வாரியத்தால் கோரப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு குடிநீர் நிதியில் இருந்து செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி மின்கம்பியாளர் திரு.முத்துச்சாமி அவர்களால் நிரந்தர துண்டிப்பு கட்டண தொகை ரூ.736/–யை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்தியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1775/2012/இ2

**தீர்மான எண்:162**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்18:** இந்நகராட்சி அலுவலக கணினி பிரிவிற்கு தேவையான உதிரி பாகஙகள் விலைப்புள்ளி அனுப்பக்கோரி கடிதம் அனுப்பியதில் கீழ்காணும் நிறுவனஙகளிடமிருந்து கீழ்கண்ட விபரப்படியான விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண். | தேவையான பொருட்கள் | தேவையான எண்ணிக்கை | விக்டரி சிஸ்டம் சிவகாசி | ராதா கம்யூட்டர்ஸ் சிவகாசி | ஜெனியூன் கம்யூட்டர்ஸ் சிவகாசி |
|---|---|---|---|---|---|
| 1 | Cannon Xerox NPG 59-Toner | 1 | 3160 | 4160 | 4160 |
| | Cannon Xerox copier Drum Unit | 1 | 17600 | 18600 | 18300 |
| | 88A HP Laser Toner | 1 | 4510 | 5510 | 5210 |
| | Cannon 326 Image Class Toner | 1 | 5200 | 6200 | 5800 |
| | 12A HP Laser Toner | 1 | 5610 | 6610 | 6410 |
| | Logitech Optical Mouse M90 | 1 | 350 | 450 | 450 |
| | Antivirus Quick Heal | 1 | 500 | 700 | 750 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | Epson 80 Column Printer Ribbon Cartage | 1 | 220 | 320 | 280 |
| | Cannon SP 201 (Ricoh) refill pack | 1 | 1000 | 1500 | 1400 |

**அலுவலககுறிப்பு :–**

மன்றம் அனுமதி வழஙகலாம், மேலும் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள விக்டரி சிஸ்டம் சிவகாசி அவர்களின் விலைப்புள்ளி ஒப்புக்கொண்டு விநியோக உத்தரவு வழஙகியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.344/2022/பி4

**தீர்மான எண்:163**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்19:** அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் மனைப்பிரிவு ஒப்புதலுக்கு 10% இடஒதுக்கீடு தரமறுத்து T.தர்மராஜ் என்பவரால் வழக்கு எண் W.P.(MD) No.16419/2022 சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் ஆணையாளர் அவர்களை 4ம் பிரதிவாதியாக வழக்கில் சேர்த்து வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக திரு.N.திலிப்குமார் வழக்கறிஞர் அவர்கள் ஆஜராவதற்கும் மற்றும் உத்தேச செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு :–**

மன்றம் அனுமதிக்கலாம் ந.க.எண்.4296/2022/எப்1

**தீர்மான எண்:164**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்20:** அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 4 நெசவாளர் காலனி மூன்றாவது தெருவில் மழைநீர் வடிகால் மிகவும் பழுதடைந்து கழிவுநீர் சாலையில் செல்வதால் அப்பகுதி நகர்மன்ற உறுப்பினர் கொடுத்த கோரிக்கையின்படியும் நகர்மன்றத்தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படியும் நெவாளர் காலனி மூன்றாவது தெருவில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணியினைச் செய்ய தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.4.60 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதி வழஙகலாம் ந.க எண்.4197/2022/இ1

**தீர்மான எண்:165**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்21:** அருப்புக்கோட்டை நகராட்சி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அத்தியாவசிய பணிகளை செய்துதருமாறு மருத்துவ அலுவலர் அரசு நகர ஆரம்ப சுகாதார நிலையம் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள். அன்னாரின் கோரிக்கையின்படியும் நகர்மன்றத்தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படியும் நகர ஆரம்ப சுகாதார நிலையத்தில் அத்தியாவசிய பணிகள் செய்ய தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ7.50 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதி வழஙகலாம் ந.க எண்.4198/2022/இ1

**தீர்மான எண்:166**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்22: அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட அந்திக்கடை பொட்டல் அருகில் உள்ள அங்கன்வாடிமையத்தில் சிறுசிறு பராமரிப்பு பணிகள் செய்ய வேண்டியது அத்தியாவசிய தேவையாக உள்ளது என நகர்மன்ற உறுப்பினர் கொடுத்த கோரிக்கையின்படியும் நகர்மன்றத்தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படியும் அங்கன்வாடி மையத்திற்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.2.25 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதி வழங்கலாம் ந.க எண்.4199/2022/இ1

**<u>தீர்மான எண்:167</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்23: அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 3, 7, 10, 12, 23 மற்றும் 26களில் உள்ள பழுதடைந்த பாலஙகளை அப்புறப்படுத்திவிட்டு புதிதாக பாலஙகள் அமைத்து தர அப்பகுதி நகர்மன்ற உறுப்பினர்கள் கொடுத்த கோரிக்கை மனுவின்படியும் நகர்மன்றத்தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படியும் மேற்படி பகுதிகளில் பழைய பாலஙகளை அகற்றிவிட்டு புதிதாக பாலஙகள் அமைக்க தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.7.25 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதி வழங்கலாம் ந.க எண்.4228/2022/இ1

**<u>தீர்மான எண்:168</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்24: அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 2, 4, 11, 14, 19, 24, 28, 29களில் உள்ள பழுதடைந்த பாலஙகளை இடித்துவிட்டு புதிதாக பாலஙகள் அமைக்க வேண்டி அப்பகுதி நகர்மன்ற உறுப்பினர்கள் கொடுத்த கோரிக்கையின்படியும் நகர்மன்றத்தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படியும் பழைய பாலஙகளை இடித்துவிட்டு மேற்படி இடஙகளில் புதிதாக பாலஙகள் அமைக்க தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.5.00 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதி வழங்கலாம் ந.க எண்.4229/2022/இ1

**<u>தீர்மான எண்:169</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்25: அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட இரயில்வேபீடர் சாலை மேற்குப்பகுதியில் சிறுபாலம் அமைக்க வேண்டியது அவசியமாக உள்ளது என வார்டு எண் 5 நகர்மன்ற உறுப்பினர் கொடுத்த கோரிக்கையின் படியும் நகர்மன்றத்தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படியும் இரயில்வேபீடர் சாலை மேற்குத்தெருவில் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.2.00 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதி வழங்கலாம் ந.க எண்.4242/2022/இ1

**<u>தீர்மான எண்:170</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்26:** அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட நாகலிங்கா நகர் (காமராஜர் தெரு மற்றும் நட்டார் தெரு) மழைக்காலத்தில் பொதுமக்கள் நடந்துசெல்ல முடியாவண்ணம் சேறும் சகதியுமாக உள்ளதால் அப்பகுதியில் கிராவல் மண் பரப்புவது அவசிய தேவையாக உள்ளது என நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் கோரிக்கையின்படியும் நகர்மன்றத்தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படியும் தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.3.00 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதி வழங்கலாம் ந.க எண்.4234/2022/இ1

**<u>தீர்மான எண்:171</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்27:** அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட ஆயிரம்கண்மாரியம்மன்கோவில் தெற்கு விரிவாக்கப்பகுதி (லீலாவதி நகர்) உள்ள 5 தெருக்களில் மழைக்காலஙகளில் பொதுமக்கள் நடந்துசெல்ல முடியாவண்ணம் சேறும் சகதியுமான உள்ளதால் அப்பகுதியில் கிராவல் மண் பரத்துவது அவசிய தேவையாக உள்ளது என நகர்மன்ற உறப்பினர் அவர்களின் கோரிக்கையின்படியும் நகர்மன்றத்தலைவர் அவர்கள் அறிவுறுத்தலின்படியும் கிராவல் மண் பரத்துவதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.3.00 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதி வழங்கலாம் ந.க எண்.4235/2022/இ1

**<u>தீர்மான எண்:172</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்28:** அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மழைநீர் வடிகால் மற்றும் கழிவுநீர் ஓடையில் மண் அள்ளுவதற்கு Tractor வாகனம் தேவையாக உள்ளது என சுகாதார ஆய்வாளர் அவர்கள் மற்றும் நகர்மன்றத்தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி புதிதாக Tractor வாகனம் வாஙகுவதற்கு விலைப்புள்ளி பெறப்பட்டதில் உத்தேசமாக ரூ.8.90 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மேற்படி வாகனம் (Tractor) வாஙகுவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அனுமதி வேண்டி பிரேரணை அனுப்பவும் மன்றம் அனுமதிக்கலாம். ந.க எண்.4241/2022/இ1

**<u>தீர்மான எண்:173</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்29:** அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட அண்ணா நகர் தெருவில் உள்ள சிறு பகுதி மழைக்காலஙகளில் மழைநீர் தேஙகி பொதுமக்கள் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது என நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் கொடுத்த கோரிக்கையின்படியும் நகர்மன்றத்தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படியும் அண்ணாநகர் பகுதியில் மழைநீர் வடிகாலுடன் கூடிய பேவர்பிளாக் தளம் அமைக்க தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.1.25 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதி வழங்கலாம் ந.க எண்.4233/2022/இ1

**<u>தீர்மான எண்:174</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்30:** அருப்புக்கோட்டை நகராட்சி துப்புரவு பணியாளர் குடியிருப்பில் சிறுசிறு பழுதுபணிகள் பார்க்க வேண்டியுள்ளதாக துப்புரவு பணியாளர்கள் கொடுத்த வேண்டுகோளின்படியும் நகர்மன்றத்தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படியும் துப்புரவு பணியாளர் குடியிருப்பில் பழுதுபார்ப்பு பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தெகை ரூ.**1.40** இட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதி வழங்கலாம் ந.க எண்.**4240/2022/**இ**1**

**தீர்மான எண்:175**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்31:** அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட திருச்சுழி சாலையில் மழைநீர் வடிகாலின் மேல் Cover Slab அமைப்பது அவசிய தேவையாக உள்ளது என அப்பகுதி பொதுமக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் கொடுத்த கோரிக்கையின்படியும் நகர்மன்றத்தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படியம் தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.**8.00** இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியின்கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதி வழங்கலாம் ந.க எண்.**4239/2022/**இ**1**

**தீர்மான எண்:176**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்32:** அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட நாகலிங்காநகரில் உள்ள குறுக்குத்தெருவில் கழிவுநீர் சாலையில் தேஙகி சுகாதாரக்கேடு ஏற்படுகிறது என அப்பகுதி பொதுமக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் கொடுத்த கோரிக்கையின்படியும் நகர்மன்றத்தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படியும் நாகலிங்காநகர் குறுக்குத்தெருவில் மழைநீர்வடிகாலுடன் கூடிய பேவர்பிளாக் தளம் அமைக்கும் பணிக்கு உத்தேச செலவுத்தொகை ரூ.**4.90** இலசத்தினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதி வழங்கலாம் ந.க எண்.**4237/2022/**இ**1**

**தீர்மான எண்:177**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்33:** அருப்புக்கோட்டை நகராட்சியில் உள்ள மழைநீர் வடிகால் மற்றும் கழிவு நீர் ஓடைகளை சுத்தம் செய்வதற்கு Hitachi வாகனம் வாங்குவது அவசிய தேவையாக உள்ளது என சுகாதார ஆய்வாளர்கள் கோரிக்கையின் அடிப்படையிலும் மற்றும் நகர்மன்றத்தலைவர் அவர்கள் அறிவுறுத்தலின் பேரில் விலைப்புள்ளி பெறப்பட்டதில் உத்தேசமாக Hitachi வாகனம் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவுத்தொகை ரூ.**25.50** இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மேற்படி Hitachi வாகனம் வாங்குவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அனுமதி வேண்டி பிரேரணை அனுப்பவும் மன்றம் அனுமதிக்கலாம். ந.க எண்.**4265/2022/**இ**1**

**தீர்மான எண்:178**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்34:**அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட திருச்சுழி சாலையில் உள்ள மழைநீர் வடிகால் மழைக்காலத்தில் தண்ணீர் செல்ல முடியாமல் மண் மேவியுள்ளதை பொதுசுகாதாரப்பிரிவு மூலம் அகற்றப்பட்டது. மேற்படிஇடத்தில் பொதுமக்கள் நலன்கருதி சுகாதார ஆய்வாளர் அவர்கள் கொடுத்த குறிப்பின் படியும் நகர்மன்றத்தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படியும் திருச்சுழி சாலையில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.**9.50** இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதி வழஙகலாம் ந.க எண்.**4238/2022/**இ**1**

**தீர்மான எண்:179**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்35:**அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட நகராட்சிப்பள்ளிகளான நெசவாளர் காலனி பள்ளி அஜீஸ்நகர் பள்ளி, மேலரதவீதி பள்ளி மற்றும் ராமசாமிபுரம் பள்ளிகளில் Ceramic Coated magnetic steel green writing board பொருத்துவதற்கு அப்பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் மற்றும் உதவி கல்வி அலுவலகர் கொடுத்த கோரிக்கையின்படியும், நகர்மன்றத்தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படியும் மேற்காணும் நகராட்சிப் பள்ளிகளில் Ceramic coated magnetic steel green writing board பொருத்துவதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.**9.75** இலட்சத்தினை நகராட்சி கல்விநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதி வழஙகலாம் ந.க எண்.**4230/2022/**இ**1**

**தீர்மான எண்:180**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்36:**அருப்புக்கோட்டை நகராட்சி நெசவாளர் காலனியில் உள்ள நகராட்சி துவக்கப்பள்ளியில் Smart Class Room அமைக்க அப்பள்ளியின் தலைமை ஆசிரியர் மற்றும உதவி கல்வி அலுவலர் அவர்களின் கோரிக்கை விடுத்ததின் அடிப்படையிலும் நகர்மன்றத்தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படியும் நெசவாளர் காலனி துவக்கப்பள்ளியில் Smart class room அமைக்க தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.**9.90** இலட்சத்தினை நகராட்சி கல்விநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதி வழஙகலாம் ந.க எண்.**4231/2022/**இ**1**

**தீர்மான எண்:181**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்37:**அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட நெசவாளர் காலனி நகராட்சி உயர்நிலைப்பள்ளியில் Smart Class Room மற்றும் மேம்பாட்டுப்பணிகள் Middle Blockல் செய்ய வேண்டி அப்பள்ளியில் தலைமை ஆசிரியர் மற்றும் உதவி கல்வி அலுவலர் அவர்கள் கொடுத்த குறிப்பின்படியும் நகர்மன்றத்தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படியும் தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.**9.90** இலட்சத்தினை நகராட்சி கல்விநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதி வழஙகலாம் ந.க எண்.**4196/2022/**இ**1**

**தீர்மான எண்:182**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்38:** அருப்புக்கோட்டை நகராட்சி அஜீஸ்நகரிலுள்ள நகராட்சிப்பள்ளியில் Smart Class Room அமைத்துத்தருமாறு அப்பள்ளியின் தலைமை ஆசிரியர் மற்றும் உதவி கல்வி அலுவலர் அவர்களின் கோரிக்கையின்படியும் நகர்மன்றத்தலைவர் அவர்களின் அறிவுறுத்திலின்படியும் அஜீஸ்நகர் நகராட்சிப்பள்ளியில் Smart Class Room அமைக்க தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.**9.90** இலட்சத்தினை நகராட்சி கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதி வழஙகலாம் ந.க எண்.**4195/2022/இ1**

**<u>தீர்மான எண்:183</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்39:** அருப்புக்கோட்டை நகராட்சி நெசவாளர் காலனி நகராட்சி உயர்நிலைப்பள்ளியில் main block smart class room அமைக்க வேண்டி நகராட்சி உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் மற்றும் உதவி கல்வி அலுவலர் அவர்களின் கோரிக்கையின்படியும் நகர்மன்றத்தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படியும் மேற்கண்ட நகராட்சி உயர்நிலைப்பள்ளியில் Smart Class room அமைக்க தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.**9.90** இலட்சத்தினை கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதி வழஙகலாம் ந.க எண்.**4194/2022/இ1**

**<u>தீர்மான எண்:184</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்40:** அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட நகராட்சிப்பள்ளிகளான நெசவாளர்காலனி உயர்நிலைப்பள்ளி அஜீஸ்நகர் பள்ளி, மேலரதவீதி பள்ளி மற்றும் இராமசாமிபுரம் பள்ளி போன்றவற்றில் Fall Ceiling அலுமினியம் ஜன்னல் மற்றும் கதவு பொருத்தும் பணி Smart TV மற்றும் தானியங்கி மணி பொருத்த அப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் உதவி கல்வி அலுவலர் அவர்களின் கோரிக்கையின்படியும் நகர்மன்றத்தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படியும் தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.**8.00** இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.நகர்மன்றத்

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதி வழஙகலாம் ந.க எண்.**4232/2022/இ1**

**<u>தீர்மான எண்:185</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்41:** அருப்புக்கோட்டை நகராட்சியில் பொறியில் பிரிவு பராமரிப்பில் உள்ள ஸ்கார்பியோ வாகன எண் TN67 AJ2135ல் ஏற்பட்டுள்ள பழுது பணிகளை மகேந்திரா நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற நிறுவனமான M/s.Automative Manufacturers Pvt., Ltd., கப்பலூர், மதுரை மூலம் மேற்கொள்ளவதற்கும், அதற்காகும் உத்தேச செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:–**

பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.**4219/2022/இ2**

**<u>தீர்மான எண்:86</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்42:** அருப்புக்கோட்டை நகராட்சி வருவாய் பிரிவு **2022–2023**ம் ஆண்டிற்கான சொத்துவரி பொதுசீராய்வு சிறப்பு அறிவிக்கையினை பிரிண்டிங செய்யும் பணி மேற்கொள்ள உள்ளதால் அவசர அவசியம் கருதி பிரிண்டிங செய்வதற்குண்டான செலவு தொகைக்கு இந்நகர்மன்றத்தீர்மான எண் **–27**, நாள் **11.04.2022**ல் அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

அதன் பேரில் மேற்கண்ட பணிக்கு **06.07.2022** அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகள் நகல்களின் இணைப்புகள் மன்றததின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர்கள் பெயர் | விலைப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1 | ஜானகி பிரிண்டர்ஸ் 1, காமராஜர் பஸ் ஸ்டாண்ட், சாத்தூர் ரோடு, விருதுநகர் | ஒரு பக்கத்திற்கு ரூ.1.20 |
| 2 | சிவா இண்டஸ்ட்ரிஸ் 1 E–T.T.கிருஷ்ணுமாச்சாரி ரோடு விருதுநகர் | ஒரு பக்கத்திற்கு ரூ.1.45 |

**அலுவலககுறிப்பு:–**

வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்த ஜானகி பிரிண்டர்ஸ் ஒப்பந்ததாரா் அவர்களின் விலைப்புள்ளியை ஒப்புக்கொள்ளலாம். குறைந்த விலைப்புள்ளி அளித்த நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.1645/2022/அ2

**தீர்மான எண்:187**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்43:** அருப்புக்கோட்டை நகராட்சி அலுவலகத்தில் உள்ள பொதுசுகாதாரப்பிரிவு நகரமைப்பு பிரிவு மற்றும் நில அளவைப்பிரிவு ஆகிய பிரிவுகளுக்கு கணினி, லேசர் பிரிண்டர், UPS மற்றும் Cash Counting Machine போன்றவை வாஙகுவதற்கு அவசிய தேவையாக உள்ளது என நகர்நல அலுவலர் அவர்கள் மற்றும் கணினி திட்ட அமைப்பாளர் அவர்கள் கொடுத்த குறிப்பின்படியும் நகர்மன்றத்தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படியும் மேற்காணும் இயந்திரஙகள் வாஙகுவதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.8.50 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி வழஙகலாம் ந.க.எண். 3730/2022/இ1

**தீர்மான எண்:188**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்43:** விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து சாலையோர வியாபாரிகளை பயோமெட்ரிக் முறையில் கணக்கெடுப்பு எடுத்தல் மற்றும் அவர்களுக்கு QR Code உடனான அடையாள அட்டை (ID Card) தயாரித்து வழஙகுதல் விற்பனை சான்றிதழ் (Certifcate of Vendors) நகர தெரு விற்பனை திட்டம் (CSVP) விரிவான செயல்படுத்துதல் திட்டம் (DIP) மற்றும் MIS தரவுகளை 5 ஆண்டுகளுக்கு பராமரித்தல் பணிக்கு 15.07.2022 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு 2 (இரண்டு) ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு Technical Bid Evaluation மேற்கொள்ளப்பட்டதில் தகுதிவாய்ந்த M/s.Mirifical Careers Pvt., Ltd., Coimbatore நிறுவனத்தின் விலைப்புள்ளி மட்டும் திறக்கப்பட்டதில் நபர் ஒருவருக்கு ரூ.700/– என்பது அதிகமான தொகையாக இருப்பதால் இப்பணிக்கான விலைகுறைப்பு சம்மத கடிதம் (Negotiation) வழஙகுமாறு கேட்டுக்கொண்டதற்கு இணஙக 25.07.2022 வரப்பெற்ற அந்நிறுவனத்தின் விலைக்குறைப்பு கடிதத்தின்படி விலைவிகிதம் மன்றத்தின் பார்வைக்கும்அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தகாரா் பெயர் | |
|---|---|---|
| 1. | M/s.Mirifical Careers Pvt., Ltd., Coimbatore | நபர் ஒருவருக்கு ரூ.650/– |

**அலுவலகக் குறிப்பு :–**

1. M/s.Mirifical Careers Pvt., Ltd., Coimbatore, நிறுவனம் நபர் ஒருவருக்கு ரூ.650/–க்கு கொடுத்துள்ள விலைப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.
2. மேலும் மேற்கண்ட பணியின் அவசர அவசியத்தை கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழஙகியதையும் மன்றம் அஙகீகரிக்கலாம்.ந.க.எண். 3253/2022/எப்1

**தீர்மான எண்:189**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

(ஒம்) திருமதி.சி.சுந்தரலட்சுமி
நகர்மன்ற தலைவர்
அருப்புக்கோட்டை நகராட்சி

ஆணையாளர்
அருப்புக்கோட்டை நகராட்சி